தமிழ் நாடு சட்டப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1970 ஆகஸ்ட் 28

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்

எஸ்.எஸ்.எல்.சி. விடைத்தாள்கள் திருத்திய ஆசிரியர்களுக்குப் பயணப்படி.

* 85 வினா.—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1969-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் எஸ். எஸ். எல். சி. பரீட்சை விடைத்தாள்களைத் திருத்த சென்னை வந்த ஆசிரியர் பயணப்படி (Traveling Allowances) சிலருக்கு இன்னும் கொடுக்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், எத்தனை ஆசிரியர்களுக்கு?

(உ) இவர்களுக்குப் பயணப்படி எப்போது கொடுக்கப்படும் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) & (உ) கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. வை. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, 1968-ம் ஆண்டு எஸ். எஸ். எல். சி. பரீட்சை விடைத்தாள்களைத் திருத்த ஏப்ரல் மாதம் சென்னை வந்த ஆசிரியர்களுக்கு நவம்பர் மாதத்தில் பயணப் படி கொடுக்கப்பட்டது. ஆனால், 1969-ம் ஆண்டு ஏப்ரல் மாத எஸ். எஸ். எல். சி. பரீட்சை விடைத்தாள்களைத் திருத்த சென்னை வந்த சில ஆசிரியர்களுக்கு நவம்பர் மாதம் வரையில் அவர்களுக் குரிய பிரயாணப்படி கொடுக்கப்படவில்லை. அத்தகைய தாமதத் திற்கு என்ன காரணம் என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, எஸ். எஸ். எல். சி. தேர்வு விடைத்தாள்களைத் திருத்துவதற்கு ஆசிரியர்கள் பத்து நாட்களுக்கு சென்னைக்கு வரவழைக்கப்படு கிறார்கள். போட்டிருக்கின்ற விதியின்படி அந்தப் பத்து நாட்களுக்கு அவர்களுக்குப் படியும் மற்றவைகளும் தரப்படுகின்றன. சில நேரங்களில் அதைக் கண்காணிப்பதற்காக இரண்டு நாட்கள் முன்னதாக வரச்சொல்லியும், சில பேர்களை இரண்டு மூன்று நாட்கள் பின்னால் இருந்து சரிபார்க்க வேண்டிய நிலை ஏற்படும் போது அவர்களுக்கு அதற்காகத் தனிப்படி கொடுக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. ஆனால், போட்டிருக்கும் விதி அதற்கு இடம்

தராத காரணத்தால் கொஞ்சம் காலத் தாழ்வு ஏற்பட்டது. பிறகு எம். டி. ஏ. ரூல்ஸின் 44 (1) விதியைத் தளர்த்தித்தான் கொடுக்க வேண்டி வந்தது. எனவே, காலத்தாழ்வு ஏற்பட்டு, பிறகு விதியைத் தளர்த்தி ஆசிரியர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றி அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய படிகள் எல்லாம் கொடுக்கப்பட்டு விட்டன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. எம். பூபதி : தலைவர் அவர்களே, இந்த ஆசிரியர்களுக்குப் பயணப்படி எந்த அடிப்படையில் கொடுக்கப்படுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, படிகள் பற்றிய விவரம் இப்பொழுது என்னிடம் இல்லை. ஆனல், ஆசிரியர்களுக்குப் பயணப்படியும் நாள் படியும் எந்த விகிதங்களில் தரப்படவேண்டுமென்று விதிகளில் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றனவோ அந்த விகிதங்களில் தரப்படுகின்றன.

திரு. கே. போஜன் : தலைவர் அவர்களே, இனிமேலாவது இம்மாதிரியான காலதாமதம் ஏற்படாமல், உடனடியாக ஆசிரியர்களுக்குப் பயணப்படி கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த ஆண்டு ஏற்பட்ட நிலைமையைக் கருத்திற்கொண்டு அடுத்த ஆண்டு முன்கூட்டியே அதற்கான ஏற்பாடுகளைச் செய்வது, எத்தனை நாள் அவர்கள் சென்னையில் தங்குகிருர்கள் என்பதைப் பொருத்திருக்கிறது. சில பேர்களை இரண்டு மூன்று நாட்கள் அதிகமாகவே சென்னையில் வைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது. மற்றவர்கள் செய்த வேலைகளைச் சரிபார்ப்பதற்கு அவர்கள் சில நாட்கள் அதிகமாகத் தங்கினுல் அதற்குரிய படிகள் அவர்களுக்கு அளிக்கப்படுவதற்குரிய அளவில் விதிகளைத் தளர்த்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. அடுத்த ஆண்டு இந்தக் கஷ்டம் இருக்காது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஆர். கருப்பையா : தலைவர் அவர்களே, எஸ். எஸ். எல். சி. தேர்வு விடைத்தாள்களைத் திருத்துவதற்காகச் சென்னைக்கு வரும் ஆசிரியர்களுக்கு நாள் படி மிகக் குறைவாகக் கிடைப்பதால், ஒரு நாள் படி ஒரு வேளைச் சாப்பாட்டுக்குக் கூடப் போதுமானதாக இல்லை. ஆகவே, அடுத்த ஆண்டிலாவது நாள் படியை அவர்களுக்கு உயர்த்திக்கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கொடுக்கப்படும் படி அவர்களுக்குப் போதவில்லை என்று அவர்கள் குறைப்பட்டுக் கொண்டார்கள். அதற்குப் பிறகு சென்ற ஆண்டு அவர்கள் திருப்தி கொள்ளும் அளவுக்கு அவர்களுடைய படி ஓரளவுக்கு உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், முன்கூட்டியே கூட அவர்களுடைய செலவுக்குப் பணம் கொடுக்கும் அளவுக்கும் இந்த ஆண்டு திருத்தும்போது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

1970 ஆகஸ்ட் 28]

திரு. வி. கே. கோதண்டராமன் : இப்பொழுது கொடுக்கப்படும் டி.ஏ. (T.A.) இடி.ஏ.(D.A.) எந்த ஆண்டில் நிர்ணயம் செய்யப்பட்டது? அப்பொழுது இருந்த விலைவாசி என்ன? இப்பொழுதிருக்கும் விலைவாசி என்ன? இப்போதைய விலை வாசிக்கேற்ற அளவில் டி.ஏ., (T.A.) டி.ஏ. (D.A.)க்களை உயர்த்துவதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த ஆண்டு விலைவாசியையொட்டி, அவர்கள் திருப்திப்படும் அளவுக்கு இந்த ஆண்டு உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது. உயர்த்திக்கொடுக்கப்பட்டது மட்டுமல்லாமல், வந்ததற்குப் பிறகு எழுதிப் பெறவேண்டிய நிலை இல்லாமல், முன்கூட்டியே கல்வித்துறை இயக்குநர் அவர்கள் தொகையை வாங்கி வைத்துக்கொண்டு அவர்களுக்கு முன்கூட்டியே தரலாம் என்று ஏற்பாடு செய்து, அவர்களுக்கு அந்தக் கஷ்டம் இல்லாத அளவு இந்த ஆண்டு பார்த்துக் கொள்ளப்பட்டதால் இந்த ஆண்டு அப்படிப்பட்ட குறை ஏதும் வரவில்லை.

நீலகிரி மாவட்ட ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் சங்கக் கோரிக்கை

* 86 வின.—திரு. கே. போஜன் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்ட ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் சங்கத்திலிருந்து 2—4—1969 தேதியிட்ட கோரிக்கை விண்ணப்பம் ஒன்று வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், இதன் மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) முறையீட்டில் அடங்கியிருந்த வேண்டுகோள்கள் பொதுத் தன்மை வாய்ந்தவையாக இருந்ததாலும், அவை அரசினால் ஏற்கனவே ஆலோசிக்கப்பட்டிருந்தபடியாலும் அவை குறித்து தனித்தனியாகத் திட்டவட்டமான நடவடிக்கை ஏதுவும் எடுக்கப்படவில்லை.

திரு. கே. போஜன் : தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்ட ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் சங்கத்தில், ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் ஓய்வு ஊதியத்தை இருபது ரூபாயிலிருந்து முப்பது ரூபாயாக உயர்த்தவேண்டும் என்று தீர்மானித்திருந்தார்கள். சர்க்கார் ஊழியர்களுக்கு முப்பது ரூபாய் அளவுக்கு உயர்த்தப்பட்டதேயொழிய ஆசிரியர்களுக்கு அந்த உயர்வு அளிக்கப்படவில்லை. இருபது ரூபாய்தான் ஓய்வு ஊதியமாகக் கிடைக்கிறது என்கிற குறை அவர்களுக்கு இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா? ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கும், ஏனைய சர்க்கார் ஊழியர்களுக்கு அளிக்கப்படும் இந்தச் சலுகையைக் கொடுக்க அரசு முன் வருமா?